# முன்பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் பிரச்சினைகளும், அவற்றைக் கையாளும் முறைகளும்

(திருமதி). ஜெ. இராசநாயகம்

## ஆய்வுச் சுருக்கம்

*சமூகத்தில் மேல்நோக்கிய அசைவை ஏற்படுத்தும் கல்வி நிலைகளில் முன்பள்ளிப் பருவக் கல்வியின் நோக்கமும், அதன் முக்கியத்துவமும் எடுத்துக் கூறப்படுவதோடு, இன்றைய சூழலில் அக்குழந்தைகள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளை இனம் கண்டு அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.*

### முன்னுரை

முன்பள்ளிக் கல்வி தொடர்பான சிந்தனைகள் பல குழந்தைக்கல்விச் சிந்தனையாளர்களினால் வெளியிடப்பட்டுள்ளன. கல்வி முறைமையின் வெளிப்பாடுகளை இச் சிந்தனையாளர்களின் கருத்துக்களிலே காண முடிகின்றது. இன்று தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் முன்பள்ளி தொடர்பான கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல நிறுவனங்கள் செயற்படுகின்றன.[1] குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்களினால் இது தொடர்பாகப் பல கருத்துக்கள் முன்வைக்கப் பட்ட போதிலும் அக்கல்விக் கொள்கைகள் சமீப காலத்தில் தான் செயல்வடிவம் பெற்றுள்ளன. கல்விச் செயற்பாடுகளை எதிர்காலத்தில் சிறந்த முறையில் வளர்த்துச் செல்ல வேண்டுமானால் ஆரம்பக்கல்வி சிறந்த முறையில் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். ஆகவே இவ்விடயத்தில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகுந்த கவனம் செலுத்தல் வேண்டும். ஏறத்தாழ மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையிலுள்ள பருவம் முன்பள்ளிப் பருவமாகும். இப்பருவத்திலே குழந்தைகளின் உடல், உள, மனவெழுச்சி, மொழி, சமூகத்தொடர்பாடல் வளர்ச்சிகளோடு அவர்களின் ஒழுக்க விழுமியங்கள் பற்றிய நடவடிக்கைகளையும் கூர்ந்து அவதானித்தல் வேண்டும்.[2]

### முன்பள்ளியின் முக்கியத்துவம்

குழந்தையின் முதல் ஆசிரியர் தாய். குழந்தை பிறந்ததிலிருந்து அதனை மடியிலிட்டுத் தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி வளர்க்கும் வேளைகளில் எல்லாம் குழந்தை தாய் மூலமாகப் பல்வேறு விதமான அறிவைப் பெற்றுக்கொள்கின்றது. தாயின் ஒவ்வொரு செயற்பாடும் குழந்தைக்கு அறிவைக் கொடுக்கின்றது. சிறுபிள்ளை தனது கைகளையும், கால்களையும், உடம்பையும் அசைத்து ஓடி ஆடி நடக்கும் போது அதனுடைய உடல் உறுதி பெறுகின்றது. ஆனால் நாளாந்தம் மாறும் சூழலுக்கேற்ப தன்னைப் பொருத்தி வாழ முற்படும் போது அறிவு தேவைப்படுகின்றது. தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றையும் ஏன்? எங்கே? எப்படி? எப்போது? என்றெல்லாம் ஆராய முற்படும் வேளையில் அதற்கு வீட்டில் பெற்றோரிடமிருந்தோ, அயலவரிடமிருந்தோ பெறும் அறிவு போதாமையினால் பள்ளி என்ற நிறுவனத்தை நாடிச் செல்லும் நிலை ஏற்படுகின்றது.[3]

இப்பருவத்திலே தான் வாழும் சூழலைப் பற்றி அறிய முற்படுகின்றது. அத்துடன் புதிய விடயங்களைக் கற்பதற்கான ஆர்வம் அதனிடத்தில் ஏற்படுகின்றது. சமூக பழக்க

வழக்கங்கள் பற்றிய அடிப்படை அறிவையும் பெற்றுக் கொள்கின்றது. [4]

ஜோன் கென்றி பெஸ்டலோசி, ஜோன் பிரட்ரிக் கோர்பார்ட், பிரெட்ரிக் புரோபல், மரிய மொன்ரிசோரி அம்மையார், ஜீன் பியாயே, புறூனர் போன்ற மேலைத்தேய சிந்தனை யாளர்களும், பாரதியார், தேசிய விநாயகம் பிள்ளை, அழ.வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர் போன்ற கீழைத்தேய சிந்தனையாளர்களும் குழந்தைக் கல்வி தொடர்பாகப் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டதோடு அதன் முக்கியத்துவத்தினையும் உணர்த்தியுள்ளார்கள்.[5] கல்வியினால் மேல்நோக்கிய அசைவை விரும்பும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் முன்பள்ளிக் கல்வித்திட்ட முறையில் வழங்கப்பட வேண்டும். குழந்தைப் பருவத்தில் உடல், உள வளர்ச்சி மிகவும் துரிதமாக ஏற்படுவதால் குழந்தைகளுக்கு எதுவும் இலகுவாகப் புரிந்துவிடுகின்றது. குழந்தைகளுக்கு ஆக்க பூர்வமான அனுபவங்களைத் தேர்ந்தெடுத்து வழங்கும்போது அவர்கள் சிறந்த அறிவைப் பெற்றுக் கொள்கிறார்கள். இக்கல்வியில் குழந்தைகளுக்கு வரைதல், வர்ணம் பூசுதல், கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், மணிகளைக் கோர்த்தல் போன்ற பல செய்கைகள் கற்பிக்கப்படும் போது குழந்தைகளின் நுண்ணிய தசைகள்இணைந்து வேலை செய்ய உதவுகின்றன. தம்முடைய அன்றாட வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கவழக்கங்கள், உணவு தானே உண்ணுதல் போன்ற விடயங்களைக் குழந்தை கடைப்பிடிப்பதற்கு இப்பள்ளிகள் உதவி புரிகின்றன. பொதுச் சொத்துக்களைப் பேணும் மனப்பான்மை, தன் பொருட்களைத் தானே கவனமாகப் பாவித்தல், பிறருக்கு உதவும் தன்மை, நாட்டின் அருஞ்செல்வங்கள் பற்றிய அறிவு, நாளாந்தக் கொடுக்கல் வாங்கல் செய்வதற்குத் தேவையான கணித எண்ணக்கரு விருத்தி போன்ற பல விடயங்களையும் குழந்தை அறிந்து கொள்கின்றது. [6]

குழந்தைகள் தம் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தவும், மற்றைய வர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் பழகிவிடுகின்றார்கள். குழுவில் ஒரு உறுப்பினனாக இருந்து தனது உரிமைகளையும் கடமைகளையும் எளிதில் கிரகித்து விடுகின்றது. எதிர்காலத்திற்குத் தேவையான விரும்பத்தகுந்த சமூக மனப்பான்மையை வளர்க்கும் திறனைப் பெற்றுக்கொள்கின்றது. பரிசோதனை செய்தல், ஆராய்தல் போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் சுற்றுப்புறத்தைப் பற்றிய விழிப்புணர்வு குழந்தைகள் மத்தியில் ஏற்படுகின்றது. இன்றைய அறிவியல் யுகத்தில் குழந்தையைச் சுற்றியுள்ள பொருட்கள், அதற்குக் கிடைக்கக் கூடிய அனுபவங்கள் அது ஈடுபடக்கூடிய செயல்கள் அனைத்திலும் அறிவியல் அம்சமே அடிப்படையாக உள்ளது. "நிலா நிலா ஓடிவா" என்று நிலாவை நோக்கிப் பாடிய குழந்தை இன்று மனிதன் நிலாவை நோக்கி சென்று வருவதை அறிகின்றது. இவ்வகையான அறிவியல் அம்சங்களை எல்லாம் அது அறிந்து கொள்ள நிறுவன ரீதியாக முன்பள்ளிக் கல்வி நிலையங்கள் அமைந்து விடுகின்றன.

இத்தகைய பல எதிர்பார்ப்புக்களோடு வரும் குழந்தை அப் பள்ளியில் குதூகலமாக, சுதந்திரமாக ஓடியாடி விளையாடுவதன் மூலம் கல்வி கற்க வேண்டும். வீட்டிற்கும், பள்ளிக்கூடத்திற்கும் இடையில் உள்ள உறவு மிகவும் பலமுள்ளதாக, நெருங்கியதாக இருத்தல் முக்கிய அம்சமாகும். பள்ளிக்கூடங்கள் சமுதாயத்தின் சுருங்கிய வடிவமாக விளங்குதல் அவசியமாகும். ஆகவே ஆசிரியர் குழந்தையின்

குடும்பச் சூழலை நன்கு விளங்கி அதற்கு பொருந்துவது போன்ற சூழ்நிலைகள் அந்நிறுவனத்தில் ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும். பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு பூரண ஒத்துழைப்பை பெற்றோர்கள் வழங்குவதன் மூலமே இத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும். ஆசிரியர்கள் குழந்தைகளுடனும் பெற்றோர்களுடனும் சிநேக பாவத்துடன் அக்கறையுடன் பழகுதல் திருப்தியைத் தருகின்றது. அந்நிறுவனத்தில் இடம்பெறும் எந்த ஒரு நிகழ்வும் பெற்றோர்களின் வசதியைப் பொறுத்தே ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதனால் முன்பருவக் கல்வி ஆசிரியர்கள் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக இருப்பது விரும்பத்தக்கதாகும். ஆசிரியர்கள் முன்பருவக் கல்வியின் முக்கியத்துவம் குறிக்கோள்களை அறிவதோடு வரலாறு, பாடத்திட்டம் வகுக்கும் முறை, பள்ளிக் கட்டிடமும் விளையாட்டுக் கருவிகளும், பல்வேறு செயல்களான கதை, பாட்டு, நாடகம் ஆகியவை கற்பிக்கும் முறைகள், பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கும் முறை, வைக்க வேண்டிய குறிப்பீடுகள் ஆகியவை தொடர்பான விரிவான அம்சங்களை பெற்றிருத்தல் அவசியமாகும்.

**குழந்தைகளிடையே காணப்படும் பிரச்சினைகள்**

குழந்தைகள் மத்தியிலே இன்று காணப்படும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று பெற்றோர்களின் வறுமை ஆகும். பொருளாதார நெருக்கடி மிகுந்த குடும்பங்களிலே பெற்றோர் மத்தியில் ஏற்படும் சண்டை, சச்சரவுகள் பிள்ளையின் ஆளுமையை பெரிதும் பாதிக்கின்றது. பிளவுபட்ட அல்லது பூசல் நிறைந்த குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் படிப்பில், விளையாட்டில் அக்கறையற்றவர்களாக இருப்பதனையும் சில இடங்களில் காணமுடிகின்றது. ஒற்றுமையுள்ள பெற்றோர்கள் மத்தியில் இருந்து வரும் பிள்ளைகள் கூடுதலாக ஆளுமையுள்ளவர்களாக விளங்கு வதையும் காணமுடி கின்றது. இதனால் இவர்களின் கல்விச் செயற்பாடுகள் எதுவித பிரச்சினைகளும் இன்றி நடைபெறுவதனை அவதானிக்க முடிகின்றது.[7]

ஆகவே ஆசிரியர்கள் குழந்தையின் குடும்பச் சூழலை நன்குணர்ந்து அதற்கேற்ற வகையில் கதைகளின் மூலமாகவும் பாட்டுக்களின் மூலமாகவும் பல விடயங்களை எடுத்துக் கூறி பாதிப்பிற்குள்ளான குழந்தைகளை மகிழ்ச்சியான ஒரு சூழலில் கற்பதற்கோ, விளையாடுவதற்கோ வாய்ப்பளிக்க வேண்டும்.

பல்வேறு விதமான பல சூழல்களில் இருந்தும் வருகின்ற குழந்தைகளின் மன உணர்வுகள் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. சில குழந்தைகள் இவ்வாறான நிறுவனங்களுக்கு செல்லும் போது அழுது கொண்டு செல்வதையும் அவதானிக்கலாம். எனவே ஆசிரியையானவள் தாயின் அன்பை வழங்குபவளாக இருக்க வேண்டும். குழந்தைகளை தம்மிடம் வரும்படி வசீகரிக்கும் தன்மையை ஆசிரியை பெற்றிருக்க வேண்டும். தனது நன்நடத்தையால் அவர்களுக்கு நற்பண்புகளையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுத்தல் அவசியமாகும். வீட்டுச் சூழலுக்கு முரண்பாடு இல்லாத வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

முதலில் குழந்தையிடம் ஏற்படுவது பிரிவுத் துயராகும். முதன் முதலாக குழந்தை தாயை விட்டுப் பிரிந்து பள்ளிக்கூடத்திற்கு வருவதால் இத்தகைய துயர்களை குழந்தை அனுபவிக் கின்றது. இத்தகைய துயர் சில வேளைகளில் குழந்தைகளின் நலனையும் பாதிக்கக்கூடும் ஆகையால் இவ்விடயத்தில் கவனம்

செலுத்துதல் மிக அவசியமாகும். தாயின் அன்புப் பிணைப்பினால் கட்டுண்ட குழந்தை தாயை விட்டுப் பிரிந்து ஒரு கணம் கூட இருக்க முடியாமல் தவிக்கும். இச் செயற்பாடு குழந்தைக்கு குழந்தை வேறுபடும் சில குழந்தைகள் இத்தகைய நிறுவனங்களுக்கு மிக விருப்புடன் செல்லும் நிலையுமுண்டு. இன்றைய சூழலில் பெரும்பாலான தாய்மார்கள் உத்தியோகத்தின் பொருட்டு குழந்தையைத் தாதிமார்களுடனோ அல்லது தன் பெற்றோர் களிடமோ விட்டுச் செல்வதனால் குழந்தை களுக்குச் சரியான விதத்தில் தாயன்பு கிடைப்பதில்லை. குழந்தை எதனைச் செய்ய முற்பட்டாலும் அதற்கு அவர்களினால் தடை ஏற்படுகின்றது. இதனால் இத்தகைய நிறுவனங்களை நாடிச்செல்லும் குழந்தைகள் அன்பான ஆசிரியர்களையும் தன் விளையாட்டுத் தோழர்களையும் கண்டு ஆனந்தமடைகின்றனர். ஆகவே இவ்வாறான பல பிரச்சினைகளைச் சுமந்துவரும் குழந்தைகளோடு ஆசிரியர்கள் மிக அன்போடு பழகி அதற்குத் தேவையான வைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

இத்தகைய பிரிவுத் துயரினால் கவலை அடையும் பிள்ளைகள் மத்தியில் பலவித உளத்தாக்கங்கள் ஏற்படுகின்றன. இரவில் தூக்கத்தில் கத்துதல், நாடித்துடிப்பு அதிகமாதல், அதிகமான வியர்வை போன்ற தன்மைகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்தும், உறவினர்களி டமிருந்தும் பாதுகாப்பை எதிர்பார்க்கின்றது. இத்தகைய தன்மைகளினால் சில குழந்தைகள் ஆளுமை குறைந்தவர்களாக வளருகின்றார்கள்.[8] இந்த நிலை பிள்ளைகளிடத்தில் ஒருவிதமான பய உணர்வை வளர்த்து விடுகின்றது. இந்தப் பய உணர்வினால் குழந்தைகள் மத்தியில் அதிகமான கோபம், தூக்கக்குறைவு, உணவை வெறுத்தல் போன்றவைகள் ஏற்படுகின்றன. சில பெற்றோர்கள் பிள்ளைகள் எதனைச் செய்ய முற்படும்போதும் பயத்தை ஏற்படுத்துகின்றார்கள். பிரம்பைக் காட்டிப் பயமுறுத்துதல், மிருகங் களைக் காட்டிப் பயமுறுத்துதல், மாறுபாடான சத்தங்களை உண்டாக்குதல் இருளைக் காட்டிப் பயமுறுத்துதல், பழக்கப்படாதவர்கள் மூலம் பயமுறுத்துதல் ஆகிய செயற்பாடுகள் குழந்தைகள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றை நீக்க வேண்டுமானால் குழந்தைகளிடம் அன்பாக இருத்தல் அவசியமாகும். தனக்கு ஏற்படும் பிரச்சினைகளை எல்லாம் தன் பெற்றோர்கள் தீர்த்துவைப்பார்கள் என்ற நம்பிக்கையும் குழந்தையின் பயத்தைக் குறைத்துவிடுகின்றது. வீட்டில் குழந்தைகள் விரும்பத்தகுந்த சூழலை ஏற்படுத்த வேண்டும். இருட்டான அறையையோ, பழக்கப்படாத புதிய மனிதர்களையோ, மிருகங்களையோ கண்டு பயப்படக்கூடிய குழந்தைகளுக்கு அவைகள் பற்றிய தவறான அபிப்பிராயத்தைப் போக்கி அவைகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

இத்தகைய பருவக் குழந்தைகள் மத்தியில் பொறாமை உணர்வு அதிகமாகக் காணப்படு கின்றது. முன்பள்ளி நிறுவனங்களுக்கு வரும்போது தாயின் அன்பை இழந்து விடுவோமா என்ற பொறாமையும் ஏற்பட்டு விடுகின்றது. அத்துடன் வீட்டில் தன் அன்புக் குரியவர்களிடமிருந்து பிரிந்து பள்ளிக்கூடத் திற்கு வரும்போது குழந்தை கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றது. வீட்டில் இன்னொரு குழந்தை பிறந்திருக்குமானால் நிச்சயம் அத்தகைய பொறாமை உணர்வு அதிகரிப்பத னால் தன்னுடைய அன்பு குறைந்துவிடுமோ என்ற எண்ணத்தினால் பள்ளிக்கூடத்திற்கு வர குழந்தை விரும்பமாட்டாது. பொறாமையின் காரணமாக தன்னைவிடச் சிறிய குழந்தையின் மீது அடித்தல், தள்ளுதல், அமுக்குதல்,

கிள்ளுதல் போன்ற சிறு தாக்குதல்களையும் குழந்தைகள் செய்யக்கூடும். இதனால் பள்ளிக்கூடத்திலும் மற்றைய குழந்தைகளோடு, சண்டையிடுதல், அனுசரித்துப் போகாமை, திருடுதல் போன்ற நிலைகள் ஏற்படுகின்றன. ஆகவே அத்தகைய வேண்டத்தகாத செயல்களைத் தன் அன்பினால் அரவணைத்துப் புத்திமதிகள் கூறுவதன் மூலம் திருத்த முடிகின்றது. இயலுமானவரை குழந்தைகள் எல்லோரும் சேர்ந்து செயற்படுகின்ற இடமாக அப்பள்ளிக்கூடத்தை வைத்திருத்தல் வேண்டும்.

குழந்தைகள் மத்தியில் ஏற்படுகின்ற ஏமாற்றமும் குழந்தையைப் பெரிதும் பாதிக்கின்றது. மற்றவர்கள் தன்னிடத்தே தனியான கவனம் செலுத்த வேண்டும் என்று எண்ணத் தலைப்படுகின்றது. வீட்டில் எதிர்பார்த்த பொருட்கள் கிடைக்காமை போன்ற சில காரணங்கள் குழந்தைகள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் அடம்பிடித்து அழும்நிலை குழந்தைகளிடத்தே ஏற்படுகின்றது. இதற்கான தண்டனைகளைப் பெற்றோரோ அல்லது ஆசிரியரோ வழங்கும்போது குழந்தை மனம் புண்பட்டுவிடுகின்றது. இதனால் இத்தகைய தொடர்ந்த செயல்களினால் பிற்காலத்தில் பலவிதமான உளக்கோளாறுகளுக்குக் குழந்தைகள் உள்ளாகின்றார்கள். எனவே குழந்தைகளுக்குப் பொருட்களைக் காட்டி ஏமாற்றுவதையோ, வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதாக ஏமாற்றுவதையோ தவிர்த்து விடுதல் வேண்டும். பள்ளிக்கூடங்களில் மதிப்பீடுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும் முறையானது பரிசினைப் பெறாத மாணவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்து விடுகின்றது. அதனைத் தாங்கக்கூடிய மனநிலையில் அந்தப் பிஞ்சு உள்ளங்கள் இருப்பதில்லை. எனவே இவ்வாறான செயல்களைத் தவிர்த்தல் வேண்டும். இல்லையேல் சகல மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்குதல் வேண்டும்.

இப்பருவ குழந்தைகளிடத்தில் அனேகமாக எதிர்ப்பு மனப்பான்மை தோன்றுவதை அவதானிக்க முடிகின்றது. மற்றையவர்களி னுடைய கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்துக் கொள்ள முற்படும் போதும் எதிர்ப்பு மனப்பான்மை தோன்றும். எதனைச் செய்யக் கூடாது என்று பெற்றோர்களினால், ஆசிரியர் களினால் கூறப்படுகின்றதோ அதையே செய்ய வேண்டுமென்று அடம்பிடிக்கும் குழந்தைகள் அனேகம். குழந்தைகள் தீயவழியில் செல்வதைத் திசைதிருப்பி விடலாமேயொழிய இதுதான் நல்லவிடயம் என்று குழந்தைகளிடம் எதையும் திணித்தல் கூடாது என்பது ஜீன் ஜாக்ஸ் ரூசோ என்பவரது கருத்தாகும். ஏனெனில் நல்ல விடயங்கள் உணர்ந்து குழந்தை செய்ய முற்படும் போது அது ஒருபோதும் குழந்தையால் மறக்கப்படமுடியாததாகும். தானாகவே செய்ய முற்படும் போது ஏற்படும் விருப்பம் பிறரது திணிப்பின்போது இருப்பதில்லை. ஆகவே எதனையும் எதிர்த்து அடம்பிடிக்கும் குழந்தை யிடத்தில் எதனையும் கட்டாயப்படுத்திச் செய்வித்தல் தவறானதாகும்.

கல்விச் செயற்பாடுகள் மிகவும் நுணுக்கமான முறையில் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். பிள்ளை வகுப்பறை என்ற ஒரு வரையறைக்குள் தான் கட்டுப்பட்டு இருக் கின்றேன் என்ற உணர்வு இல்லாமல் சுதந்திரமான முறையில் ஓடியாடி விளையாடு வதன் மூலம் கல்வி கற்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தளபாடங் களும் கவர்ச்சிகரமாக இருத்தல் வேண்டும். சில பிள்ளைகள் மற்றைய பிள்ளைகளுடன் சேராமல்,

எதுவித விளையாட்டிலும் ஆர்வம் காட்டாமல் இருப்பார்கள். ஆனால் கற்பதில் நாட்டம் இருக்கும். சில பிள்ளைகளுக்கு கற்பதிலும் நாட்டம் இருக்காது. ஆசிரியர்கள் அவ்வாறான பிள்ளைகளை இனம் கண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும். இதனால் ஆசிரியர்கள் பிள்ளையின் குடும்பச் சூழலை அறிவதோடல்லாமல் குழந்தை உளவியல் பற்றிய அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும். குழந்தை உளவியல் இன்று உன்னத வளர்ச்சியை பெற்றுள்ளது. எதிர்காலச் சமூகத்தின் வாழ்விலும், வளத்திலும் குழந்தை உளவியலின் முக்கியத்துவம் பரவலாக உணரப்படுகின்றது.[9] குழந்தை வளர்ப்பை வளமாக்கும் அம்சங்களில் குழந்தை உளவியல் முதலிடம் பிடிக்கின்றது. குழந்தையின் சமூகத் தளத்தை விளங்கிக் கொள்ளல், தனியாள் இயல்புகளை விளங்கிக் கொள்ளல், பலங்களையும் பலவீனங்களையும் தெரிந்து கொள்ளல், இசைவாக்கப் பிரச்சினை களைத் தெரிவு செய்தல் முதலியவற்றுக்குக் குழந்தை உளவியல் வழியமைக்கின்றது.

குழந்தைகளில் சிலருக்கு விரல் சூப்பும் பழக்கமும் உண்டு. இப்பழக்கம் குழந்தை பிறந்த சில நாட்களுக்குள் ஏற்பட்டுத் தொடர்ந்துவரும் பழக்கமாகும். பசி, வெட்கம், களைப்பு, வெறுப்பு, தூக்கம், போன்ற காரணிகளால் விரலை வாயில் வைத்துச் சூப்புகின்றார்கள். பள்ளி முன்பள்ளிப் பருவக் குழந்தைகளும் இத்தகைய பழக்கத்தை மறந்து விடுவதில்லை. பள்ளிக்கூடத்தில் விரல் சூப்புதல் மூலம் குழந்தை கற்றலில் அதிக ஆர்வம் காட்டாது. சேர்ந்து விளையாடுவதும் குறைவாக இருக்கும். இதனை ஆரம்பத்தில் திசைதிருப்பி விடுதல் பெற்றோரின் கடமையாகும். பிற்காலத்தில் புகைபிடித்தல், மது அருந்துதல், அதிகமாகப் பேசுதல் போன்ற பழக்கங்களுக்கு அடிகோலுகின்றது.[10] இதனால் இவ்விடயத்தில் ஆசிரியர்களும் மிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். இத்தகைய செயலைத் திசைதிருப்பும் நோக்குடன் குழந்தைகளே வேறு பல விளையாட்டுக்களிலும், செயல்களிலும் ஈடுபடச் செய்யலாம். தூங்கும் போது வாயில் இருந்து விரலை வெளியே எடுத்துவிட வேண்டும்.

குழந்தைகளிடத்தில் நகம் கடிக்கும் பழக்கமும் காணப்படுகின்றது. இது சில பெரியோர்களிடமும் காணப்படுகின்றது மிகுந்த கவலையும் அச்சமும் உடைய குழந்தைகள் இதனைச் செய்வதை அவதானிக்க முடிகின்றது. இது குழந்தைகளிடம் காணப்படும் மனப் பிரச்சனையாகும். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் தன்மீது அதிக அக்கறை செலுத்த வேண்டு மென்று நினைக்கும்போதும் அச்சத்துடனும், கவலையுடனும் காத்துக் கொண்டிருக்கும்போதும், திரைப்படக் காட்சிகளில் திடுக்கிடும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போதும் குழந்தை நகம் கடிப்பதை அவதானிக்க முடிகின்றது. நகம் கடித்தல் குடும்பப் பழக்கத்தைப் பொறுத்தும் அமைகின்றது. இதனைத் தண்டனை வழங்குவதன் மூலம் தடுத்து நிறுத்திவிட முடியாது. எத்தகைய சூழ்நிலைகளில் குழந்தை நகத்தைக் கடிக்கின்றது என்பதையறிந்து அத்தகைய செயற்பாடுகளைக் குழந்தையிடமிருந்து தவிர்த்துவிடல் வேண்டும்.

குழந்தைகள் பல விடயங்களில் பொய் பேசுகின்ற சந்தர்ப்பங்களையும் காணமுடிகின்றது. மிகவும் சிறிய வயதில் குழந்தைகள் மொழி வளர்ச்சியின்மை காரணமாகக் கூறும் சில வார்த்தைகள் பொய் பேசுவது போலத் தோன்றும். பெரியவர்கள் குழந்தைகள் முன்னிலையில் எக்காரணம் கொண்டும் பொய் பேசுதல் கூடாது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் வழங்கும் தண்டனைகளில் இருந்து தம்மை காப்பதற்கும்

குழந்தைகள் பொய்பேச ஆரம்பிக்கின்றார்கள். ஆகவே இத்தகைய தண்டனைகள் குழந்தையை மேன்மேலும் தவறுகள் செய்யத் தூண்டுகின்றது.

குழந்தைப் பருவத்தில் அவர்களுக்கும் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றில் தொற்றுநோய்களும் பலவாகும். ஆகவே பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளைக்குத் தொற்று நோய் ஏற்பட்டால் அது பூரண குணமாகும்வரை குழந்தையை பள்ளிக்கூடத் திற்கு அனுமதித்தல் கூடாது. நோய்க் காலங்களில் லீவு எடுப்பதனால் குழந்தைக்குக் கற்கும் ஆர்வம் குறைவடைகின்றது. உடல் களைப்படைகின்றது. இதனால் இந்நோய்களில் இருந்து விடுபட வேண்டுமானால் தடுப்பு மருந்துகளை உட்கொள்ள வேண்டும். அத்துடன் அடிப்படையான சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரிப்பதற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நோய்கள் எப்படி ஏன்? ஏற்படுகின்றன என்பது பற்றிய அடிப்படையான அறிவைக் குழந்தைகள் பெறும்போது ஓரளவு அத்தகைய நோய்களில் இருந்து விலகிக் கொள்கின்றார்கள்.

முன்பருவப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் கற்றுக்கொள்ளும் விடயத்தை சில வேளைகளில் மறந்துவிடுவார்கள். இதனால் அங்கு கற்றுக் கொடுக்கும் விடயத்தை வீட்டிலும் குழந்தைகள் கடைப்பிடிக்கக்கூடிய வசதிகளை ஓரளவேனும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனால் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் இருத்தல் அவசியமாகும். இத்தகைய நெருக்கமான உறவுகள் குழந்தைகளிடத்தே தோன்றுகின்ற தேவையற்ற பயம், கவலை போன்றவற்றையும் நீக்கிவிடும்.

குழந்தைகளிடையே எதுவிதமான ஏற்றத் தாழ்வுகளையும் ஆசிரியர் உணரமுற்படக் கூடாது. அது குழந்தையின் மனத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. வகுப்பில் திறமையாகச் செயற்படும் பிள்ளைகளையே எந்த ஒரு செயற்பாட்டின்போதும் நிகழ்வின் போதும் முன்னிறுத்துதல் அனேகமாக முன்பள்ளி நிறுவனங்களிலோ, பள்ளிக்கூடங்களிலோ காணப்படுகின்றது. இத்தகைய நிலைகளினால் மற்றைய குழந்தைகளின் மனம் புண்படுகின்றது. ஆசிரியர்களுக்கும் அப்பிள்ளைமேலே அதிகம் பிரியமாக இருக்கும். அதனை எந்தவொரு கட்டத்திலும் ஆசிரியர் வெளிக்காட்டாது செயற்படுதல் வேண்டும். வகுப்பில் எல்லாக் குழந்தைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். வகுப்பில் எல்லாக் குழந்தைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். குழந்தைகள் தம் ஏழ்மை நிலையைக் கண்டு மற்றைய குழந்தைகளோடு தம்மையும் ஒப்பிட்டு கவலை அடையும் நிலை நீக்கப்படல் வேண்டும். இது வரவேற்கத்தக்க வொரு விடயமாகும். ஆகவே சீருடை அணியும் பழக்கத்தை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். இது பிற்காலத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்ற செயல்களைக் கடைப்பிடிப்பதற்கும் உதவுகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களும் இத்துறை தொடர்பாகப் போதியளவு பயிற்சி உடையவராக இருத்தல் அவசியம். அன்பு,சகிப்புத்தன்மை, சாந்தம், கருணை, இரக்கம் நிரம்பியவர்களாக இருத்தல் முக்கியமாகும்." செயற்பாடுகளைத் திட்டமிட்டு விளையாட்டு, கதைகள், நடனங்கள், பாட்டுக்கள் மூலம் கற்பிப்பதில் வல்லவராக இருத்தல் இன்னுமொரு அம்சமாகும். ஏனைய காரணிகள் எவ்வளவுதான் சிறப்புடையதாக இருந்தாலும் ஒரு கல்வி முறையின் ஆற்றல் ஆசிரியரின் முன்மாதிரியிலேயே தங்கியுள்ளது.

குழந்தைகளோடு குழந்தையாக மாறி ஆசிரியர் செயற்பட வேண்டும். தகுந்த பொருத்தமான கற்பித்தல் உபகரணங்களைப் பாவித்தல் வேண்டும். குழந்தைக் கல்வியிலே எண்ணக் கருக்களை அறிமுகம் செய்கையில் பொருட் களைக் காட்டுதல் வேண்டும். ஆனால் இன்றைய சூழலில் கிராமப்புறங்களில் இத்தகைய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகள் எதிர்கொள்ளப் படுகின்றன. சில நிறுவனங்களுக்குப் பெற்றோரின் ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை. இதனால் நிதிப் பற்றாக்குறை ஒரு பெரும் குறைபாடாக விளங்குகின்றது. கட்டிடமும் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடு வதற்குப் போதியளவு இடவசதி இருத்தல் முக்கிய அம்சமாகும். இதன் மூலம் குழந்தைகள் மத்தியில் சுதந்திர உணர்வு வளர்கின்றது.

## முடிவுரை

கல்வி உலகில் இன்று மிகப்பெரிய மாற்றங்களும், அபிவிருத்திகளும் நிகழ்ந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் குழந்தைக் கல்வியில் அதிகளவு கவனம் காட்டுதல் வேண்டும். உலக நாடுகள் இதனை நன்குணர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனவே எதிர்காலக் குடிமக்களாகிய குழந்தைகளைச் செம்மையாக வளர்த்தல் ஒரு நாட்டினுடைய சிறந்த பாதுகாப்பாகும். ஆகவே சிறந்த மனஉறுதி, உடல் உறுதியுள்ளவர்களாகக் குழந்தைகள் வளர வேண்டுமானால் சத்துள்ள உணவு, நல்ல உணவுப்பழக்கம், உறக்கம், ஓய்வு போன்ற விடயங்களைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவதானித்து அதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இதனால் ஆளுமையுள்ள குழந்தைகள் உருவாக்கப்பட்டு சமூகத்திற்குக் கொண்டுசெல்லப்படுகின்றார்கள். இதன் மூலம் சமூகமும் வளர்ச்சி பெறுகின்றது. எதிர்காலத்திற்குத் தேவையான விரும்பத்தகுந்த சமூக மனப்பான்மையை வளர்க்கும் இடமாகப் இப்பள்ளிக்கூடங்கள் விளங்கும்போது குழந்தைக் கல்வி முழுமையான வெற்றியைப் பெறும்.

இத்தகைய முன்பள்ளிக் கல்விக் கூடங்கள் இன்று மிகவும் வளர்ச்சி பெற்று வருகின்றன. முன்பள்ளிக் கல்வி தொடர்பான பல கருத்துக்களையும், எண்ணங்களையும் பிளேட்டோ, கொமேனியஸ், ரூஸோ, பெஸ்ரலோசி, புரொபல், மொன்ரிசோரி, மகாத்மாகாந்தி போன்றவர்கள் வெளியிட் டுள்ளார்கள். கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், பள்ளிக்கூட ஒழுங்கமைப்பு மதிப்பீட்டு முறைகள் பற்றிய இவர்களின் கருத்துக்கள் இன்றும் முன்பள்ளி நிலைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன.[12] இவர்களால் வெளியிடப் பட்டுள்ள பல கருத்துக்கள் குழந்தைகளின் கற்றல் பிரச்சினைகளை இனம்காண்பதோடு அவற்றைத் தீர்க்கும் முறைபற்றியும் பல கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றன. இத்தகைய கல்வியியலாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் குழந்தைக் கல்வி நன்கு திட்டமிடப்பட்டு அமையுமேயானால் எதிர் காலத்தில் முன்பள்ளிக் கல்வி கூடங்கள் சிறந்த கல்வியை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

## அடிக்குறிப்புக்கள்


1. S. Khurashid - ut, Islam, Rao.K; 2002, Early child hood care and Education, common wealth Publication, New Delhi, p. 14.
2. Educational Research, 2002, Pre School Education and curricular Reforms, Jeyarasah.S, The council for Educational Research,p.17.
3. அவையன், அ; 1980, பாலர் பள்ளிக் கையேடு, சர்வோதய இல்கியப்பண்ணை மதுரை, ப.13.
4. Jegananath Mohanty; 2000, Early child hood care and Education, Deep and Deep Publications PVT. Ltd, New Delhi, p.2
5. ஜெயராசா, ச; 2001, குழந்தைக்கல்விச் சிந்தனைகள், போஸ்கோ வெளியீடு, ப.1-55
6. அவையன், அ; பாலர்கல்விக் கையேடு, மு.சு.நூல், ப.19.
7. Devendra thakur, Thakur. N; Primary Education and Adult Literacy, Deep& Deep Publications, 1997, p.141
8. ஜெயராசா, ச; 2001, குழந்தை உளவியவல், நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டம். மாநகரசபை, யாழ்ப்பாணம், ப.50.
9. மேலது, ப.10.
10. பங்கஜம். பு.இ; 1992, பள்ளி முன்பருவக் கல்வி, சென்னை, 1997, ப.185.
11. ஜெயராசா, ச; 1997, பாலர் கல்வி, யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம், ப.115
12. Jagannath mohanty. P; Earcly child hood care and Education, OP. cit, p.8.